# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1864/54 - 2014 මැයි මස 30 වැනි සිකුරාදා - 2014.05.30

*1864/54 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 63(2)(எப்) ஆம் பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, இலங்கைப் பாராளுமன்றத்தினால் 2014, பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

இவ்வொழுங்குவிதிகள் கீழ்க் காட்டப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பில் மட்டும் ஏற்புடையதாகும்.

ஜனக பண்டார தென்னக்கோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2014, மே 22.

ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் காணி கொள்ளுதல் (நட்டஈடு செலுத்துதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) வெளியிடப்பட்ட சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலொன்று தொடர்பில் (இதனகத்துப்பின்னர் "குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) (2) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் கருத்திட்டங்களுக்காக ஏதேனும் காணியின் கொள்ளுதலினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் ஊறுப் பாதிப்புக்காகச் சந்தைப் பெறுமதியை மதிப்பீடு செய்தல் அடிப்படை அல்லது நட்டஈடு இவ்வொழுங்குவிதிகளின் 3,4,5 மற்றும் 6 ஆம் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கியிருக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள் பின்வருமாறு -

(அ) கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக வீதிக் கருத்திட்டம்;
(ஆ) கொழும்பு சுற்றுவட்ட நெடுஞ்சாலை அபிவிருத்திக் கருத்திட்டம்;
(இ) தென்னிலங்கை போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம்;
(ஈ) கொழும்பு - கண்டி வீதிக் கருத்திட்டம்;
(உ) ஒருகொடவத்தை - அம்பத்தலே வீதிக் கருத்திட்டம்;
(ஊ) புதிய களனிப் பாலம் நுளைவு வீதிக் (களனி முல்லையிலிருந்து அங்கொடை, கொஸ்வத்தை வீதி) கருத்திட்டம்;
(எ) மட்டக்குளிப் பாலம் நுளைவு வீதிக் கருத்திட்டம் (சென்றல் வீதியும் அளுத்மாவத்தையும்);
(ஏ) மாத்தறை - கதிர்காமம் புகையிரத நிர்மாணக் கருத்திட்டம்;
(ஐ) தெதுறு ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம்;
(ஒ) இரத்தினபுரி - பலாங்கொடை வீதிக் கருத்திட்டம்;
(ஓ) பலாங்கொடை - பண்டாரவளை வீதிக் கருத்திட்டம்;
(ஔ) பாதெனிய - அநுராதபுரம் வீதிக் கருத்திட்டம்;



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(க) தம்பலகாமம் - கிண்ணியா வீதிக் கருத்திட்டம்;
(ங) 5/2 பாலம் (கட்டுகஸ்தோட்டை) - கண்டி - யாழ்ப்பாணம் வீதி;
(ச) மாத்தறை - கொடகம வீதி;
(ஞ) ஹொரணை - பாமங்கடை வீதி;
(ட) தென்னிலங்கை அதிவேக வீதி - மாதுறுகொடை வீதி; அத்துடன்
(ம) கிருலப்பனை - கொடகமை வீதி.

3. (1) குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டமொன்றிற்காக ஏதேனும் காணியின் கொள்ளுதல் காரணமாக ஏதேனும் ஊறுப்பாதிப்புக்காக ஏதேனும் காணியின் சந்தைப் பெறுமதி அல்லது நட்டஈடு காணி கொள்ளப்பட்ட இடத்திலுள்ள உரிய பிரதேச செயலாளர் பிரிவுக்காக நியமிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் "லார்க்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) காணி கொள்ளல் மற்றும் மீள்குடியமர்த்தல் குழுக்களினால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) லார்க் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) இயைபான பிரதேசச் செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் அல்லது உதவிப் பிரதேச செயலாளர்;
(ஆ) நில அளவையாளர் நாயகம் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்;
(இ) பிரதான விலை மதிப்பீட்டாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்; அத்துடன்
(ஈ) முறையாக குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டம் எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உதவிச் செயலாளரின் தரத்துக்குக் குறையாத அலுவலரொருவர்.

(3) இயைபான காணி கொள்ளல் மூலம் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு ஆளும் லார்க்கின் நடவடிக்கைமுறைகளில் அவர்களுடைய கூற்றைச் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும்.

4. (1) லார்க்கானது இவ்வொழுங்குவிதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் காணிக்கான சந்தைப் பெறுமதி மற்றும் செலுத்தப் பட வேண்டிய நட்டஈட்டைத் தீர்மானிப்பதில் (2) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட பரிமாணங்களையும் நிகழ்வுகளையும் கருத்தில் எடுத்தல் வேண்டும்.

(2) (அ) எழுத்து மூல உரித்துக் கோரிக்கைகள்:-

காணிச் சொந்தக்காரரினால் அல்லது பாதிக்கப்பட்ட ஆட்களினால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலக் கோரிக்கைகள்;

(ஆ) காணிகள்:-

(i) காணிக்கான கொடுப்பனவு பிரதான மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறான மாற்றீட்டுச் செலவு மற்றும் நியதிச்சட்ட நட்டஈட்டுக்கும் மாற்றீட்டுச் செலவுக்குமிடையிலான வித்தியாசத்துக்கு இட்டுச் செல்கின்ற தண்ணளிவு கொடுப்பனவொன்றையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(ii) தனிவேறானவொன்றாக உருவகமொன்றாகப் பயன்படுத்த முடியாத காணியொன்றின் கொள்ளலின் பின்னர் எஞ்சியுள்ள பாகமொன்றை (கமத்தொழிற் காணிகள் தவிர்ந்த) லார்க்கானது காணிச் சொந்தக்காரர் அம்மேலதிகப் பாகத்தை வைத்திருக்க விரும்புவாராயின் அவருக்குப் படியொன்றை வழங்கலாம்;

(iii) கமத்தொழில் காணிகள் என்னும் விடயத்தில் எஞ்சியிருப்பது பயிர்ச்செய்கைக்கு பௌதீக ரீதியாக இயலாதிருப்பின் லார்க் கொள்ளுதற்காயினுஞ் சரி அல்லது மீதியுள்ள விஸ்தீரணத்துக்கு கொடுப்பனவொன்றைச் செய்வதற்காயினுஞ்சரி தீர்மானிக்கலாம். நியாயமான நேரமானது கொடுப்பனவானது சந்தைப் பெறுமதியின் மீது செய்யப்படாதவிடத்து வருடாந்த அறுவடைப் பயிர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(iv) எல்லா தண்ணளிக் கொடுப்பனவுகளும் லார்க்கினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்;

(இ) அரச காணிகள் மீது அத்துமீறிக் குடியிருப்போர்கள்:-

(i) அரசாங்கக் காணிகளின் மீது அத்துமீறிக் குடியிருப்போருக்குக் கொடுப்பனவெதுவும் செய்யப்படுதலாகாது. ஆயின், எவ்வாறாயினும் காணியின் அபிவிருத்திக்கான கொடுப்பனவொன்று செய்யப்படுதல் வேண்டும்.

(ii) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகள் வெளியிடப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளைத் திகதிக்கு முன்னர் வதிவுற்றவர்களான அத்துமீறியோர்களுக்கு மட்டும் ஏற்புடையதாதல் வேண்டும்;

(ஈ) நெற்காணிகள்:-

தண்ணளிவுக் கொடுப்பனவொன்று நியதிச்சட்ட நட்ட ஈட்டிற்கும் பிரதான விலை மதிப்பீட்டாளரினால் கணிப்பீடு செய்யப்பட்டவறான காணியின் சந்தைப் பெறுமதியின் பத்து வீதத்திற்குச் சமமான தொகைக்கும் இடையிலான வித்தியாசத்தின் அடிப்படையின்மீது நெற் காணிகளுக்காகச் செய்யப்படுதல் வேண்டும்;

(உ) கட்டிடங்களும் நிர்மாணங்களும்:-

கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களுக்கான (தேய்வின்றி) மாற்றீட்டுச் செலவானது, பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு, லார்க்கினால் தீர்மானிக்கப்பட்டவாறான தொகையொன்றாக இருத்தல் வேண்டும்:-

(i) நிர்மாணமொன்றின் பகுதிகளுக்காக: நிர்மாண முனைகள் வரையான கொடுப்பனவுக்காக கருதப்பட்ட நிலப்பரப்பு;

(ii) நிர்மாணமொன்றின் எஞ்சியுள்ள பகுதிகள்:- எஞ்சியுள்ள பாகம் மேலதிகப் பாவனைக்குப் பொருத்தமில்லாதுவிடின் லார்க்கானது அப்பாகத்துக்கான நட்டஈட்டைச் செலுத்துதல் வேண்டும்;

(ஊ) வீட்டு வாடகைச் சட்டத்தின் கீழான வாடகைக் கட்டுப்பாட்டு நிலமனைகள்: வதிவிட நிலமனைகளும் வியாபார நிலமனைகளும்:-

கட்டிடங்களுக்கான தண்ணளிவுக் கொடுப்பனவானது நியதிச்சட்ட நட்டஈட்டிற்கும் மாற்றீட்டுச் செலவுக்கும் இடையிலான வேறுபாடாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வரும் முறைக்கிணங்க செலுத்தப்படுதல் வேண்டும்:-

| இருப்பாட்சியாளரால் இருப்பாட்சியாண்மையின் காலப்பகுதி | வீதம் | |
|---|---|---|
| | இருப்பாட்சியாளர் | சொந்தக்காரர் |
| 1. 20 வருடங்களுக்கு மேல் | 75% | 25% |
| 2. 10 தொடக்கம் 20 வருடங்கள் வரை | 50% | 50% |
| 3. 5 தொடக்கம் 10 வருடங்கள் வரை | 25% | 75% |
| 4. 5 வருடங்களுக்குக் கீழ் | 10% | 90% |

(எ) தொழில் இழப்பு:-

கொடுப்பனவுகள் பின்வரும் முறையில் தொழில் வகுதிப்படுத்தலுக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

| தொழில் வகுதி | உரித்துடைமை |
|---|---|
| 1. முறையற்ற (வருமானவரி செலுத்தாதவர்) | ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் ஊடாக வருமானம் உறுதிப்படுத்தப்படுமாயின் ரூபா 15,000 அல்லது 3 மாத தேறிய வருமானம் ஆகிய இரண்டில் கூடிய பெறுமதி. |
| 2. முறையான (வருமானவரி செலுத்துகின்றவர்) | தொழில் முற்றுமுழுதாக இழக்கப்படுமாயின் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் வெளியீட்டுத் திகதிக்கு உடன் முந்திய 3 வருட தேறிய இலாபத்தின் சராசரித் தொகை.<br><br>தொழில் தற்காலிகமாகத் தடைப்படுமாயின் கொடுப்பனவானது லார்க்கினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். |

(ஏ) வாழ்வாதார இழப்பு:-

சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளோரும் வருமான இழப்பின் காரணமாக தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டோரும் லார்க்கினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டமைக்கான கொடுப்பனவொன்றுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்;

(ஒ) பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான படி:-

மேலதிகக் கொடுப்பனவொன்று லார்க்கினால் தீர்மானிக்கப்பட்டவாறான பாதிப்பான சூழ்நிலையொன்றில் உள்ள குடும்பங்களுக்காகச் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஓ) ஊழியத்தின் சம்பள இழப்பு:-

தமது ஊழிய இடங்களில் கொள்ளல் காரணமாக தொழிலுக்கான சம்பளங்களை இழந்த ஆட்கள் லார்க்கினால் தீர்மானிக்கப்பட்டவாறான கொடுப்பனவொன்றுக்காக உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்;

(க) இறுதி திகதிக்கு முன்னர் ஆதனங்ளின் உடமையை கையளித்தலுக்கான தண்ணளிவுக் கொடுப்பனவு:-

(i) பாதிக்கப்பட்ட ஆட்கள் கொள்ளல் அலுவலரினால் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரான பயிர்செய்யப்பட்ட நிலமொன்றின் அல்லது வதிவிடக் கட்டிடமொன்றின் உடமையைக் கையளிப்பாராயின் அவர்கள் லார்க்கினால் தீர்மானிக்கப்பட்டவாறான தண்ணளிக் கொடுப்பனவொன்றுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்;

(ii) தற்காலிக விதிவிடம்:-

ஆதனத்தின் பௌதிக உடைமை கொள்ளல் அலுவலரினால் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் எடுப்பதற்கு தேவைப்படுத்தப்படின் பின்வரும் முறையில் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட கட்டளைத் திகதிக்கு முன்னர் வதிவினர்களாகவுள்ள வீட்டின் நிலப்பரப்பின் அடிப்படை மீது பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு செலுத்தப்படுதல் வேண்டும்:-

| வீட்டுவகுதி (நிலப்பரப்பு) (சதுர அடி) (ரூபா) | மாநகர சபை இடப்பரப்பு (ரூபா) | நகரசபை இடப்பரப்பு (ரூபா) | பிரதேசசபை சபை இடப்பரப்பு (ரூபா) |
|---|---|---|---|
| 1. 500 க்குக் கீழ் | 50,000 | 40,000 | 20,000 |
| 2. 500-750 வரை | 60,000 | 50,000 | 30,000 |
| 3. 750 தொடக்கம் 1000 வரை | 75,000 | 60,000 | 40,000 |
| 4. 1000 மேல் | 100,000 | 75,000 | 50,000 |

(iii) படியை உயர்த்துதல்:-

படியொன்றை உயர்த்துகின்ற கொள்ளல் அலுவலரினால் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் எடுக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்டது ஆதனத்தின் பௌதிக உடமையானது பின்வரும் முறைமையில் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைத் திகதிக்கு முன்னர் வதிகின்ற வீட்டின் நிலப்பரப்பின் மீதான அடிப்படையில் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

| வீட்டு வகுதி (சதுர அடி) | (நிலப்பரப்பின் மீது கொடுப்பனவு) (ரூபா) |
|---|---|
| 1. 500 க்குக் கீழ் | 50,000 |
| 2. 500 - 750 வரை | 75,000 |
| 3. 750 தொடக்கம் 1000 வரை | 100,000 |
| 4. 1000 க்கு மேல் | 150,000 |

(ங) மீள்குடியமர்விற்கான கொடுப்பனவு:-

(i) கொள்ளப்பட்ட காணிக்கான உரித்துடன் கொள்ளப்பட்டதால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மீள்குடியேற்றப்பட்டவரும் லார்க்கினால் தீர்மானிக்கப்பட்ட அபிவிருத்தி செய்யப்படாத காணியின் பெறுமதிக்குச் சமமான அனைத்துச் சேவை வசதிகளுடன் கூடிய மீள் குடியமர்வதற்கான இடமொன்றிலிருந்து 20 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தை விஞ்சாத காணித்துண்டொன்றிற்காக அல்லது (ஞ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறான சுய மீள் குடியமர்விற்கு ஏற்புடைய பணக்கொடுப்பனவிற்கு உரித்துடையவராவார்.

(ii) லார்க் நியாயமானதும் நீதியானதும் என கருதுமிடத்து, அரச காணிகளில் அத்துமீறியோர்களுக்கு மீள் குடியமர்த்தப்பட்ட இடத்திலிருந்து 10 பேர்ச்சஸ் விஸ்தீரணம் வரையிலான காணித்துண்டொன்று அல்லது (ஞ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறான சுய மீள் குடியமர்விற்கு ஏற்புடைய பணக்கொடுப்பவொன்று வழங்கப்படலாம்;

(iii) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளியடப்பட்ட கட்டளையின் திகதிக்கு முன்னர் ஆகக்கறைந்தது மூன்று வருடங்கள் ஒரே தேருநர் இடாப்பின் அல்லது தனிவேறான தேருநர் இடாப்புகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரே வீட்டில் வதிகின்ற உப குடும்பங்கள், மீள் குடியமர்வதற்கான இடமொன்றிலிருந்து 10 பேர்ச்சஸ் விஸ்தீரணம் வரையிலான காணித்துண்டொன்றுக்கு அல்லது பந்தி (ஐ) வில் குறித்துரைக்கப்பட்டவாறான சுய மீள் குடியமர்விற்காக ஏற்புடைய பணக் கொடுப்பனவின் 50 சதவீதத்துக்கு உரித்துடையவர்கள்:

ஆயின், எவ்வாறாயினும் இப் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட காணிகளுக்கான உரித்துடைமை குறித்த இடப் பரப்பொன்றிலுள்ள கிடைக்கத்தகு காணிகளுக்கு அமைதல் வேண்டும்.

ஆயின், மேலும் சுய மீள் குடியமர்வுக்கு ஏற்புடைய பணக் கொடுப்பனவொன்று லார்க் தோதானதெனக் கருதுமாயின் இப்பந்தியின் கீழ் அத்தகைய மீள்குடியமர்த்தப்பட்டவரால் உரித்துடையதாக்கப்பட்ட காணித்துண்டொன்றுக்கு மேலதிகமாக மீள்குடியமர்த்தப்பட்டவருக்குச் செய்யப்படலாம்;

(ஐ) சுய மீள் குடியமர்வு:-

(i) சுய மீள் குடியமர்வுக்கு விரும்புகின்ற குறித்த கொள்ளல் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆட்கள் கொள்ளுதலுக்கான ஆதனம் எவ்விடத்தில் அமைந்துள்ளதோ அவ்விடத்திலுள்ள ஆதனமுள்ள இடப்பரப்பின் மேல் தங்கியுள்ள காணித்துண்டமொன்றுக்குப் பதிலாக (iii) ஆம் உப பந்தியில் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவொன்றுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்;

(ii) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை வெளியிடப்பட்ட திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது 3 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு ஒரே வீட்டில் வாழ்கின்ற ஒரே தேருநர் இடாப்பில் அல்லது தேருநர் இடாப்புகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட உப குடும்பங்கள் உப பந்தி (iii) இல் குறித்துரைக்கப்பட்டவாறான சுய மீள்குடியமர்விற்காக ஏற்புடைய பணக் கொடுப்பனவின் 50 சதவீதத்தைப் பெற உரித்துடையவராவார்.

(iii)

| | | |
|---|---|---|
| மாநகர சபை இடப்பரப்புகள் | ரூ. | 500,000 |
| தலைநகரிலும் முதலீட்டு இடப் பரப்புகளின் சபைகளிலுமுள்ள நகரசபை இடப்பரப்புகள் மற்றும் பிரதேச சபை இடப்பரப்புகள் | ரூ. | 300,000 |
| பிரதேச சபை இடப்பரப்புகள் | ரூ. | 150,000 |

(3) (அ) அனைத்துத் தண்ணளிவுக் கொடுப்பனவுகள் லார்க்கினால் தீர்மானிக்கப்பட்டவாறானதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் தண்ணளிவுக் கொடுப்பனவொன்றுக்கு வட்டியெதுவும் செலுத்தப்படுதல் ஆகாது.

5. (1) அத்தகைய கொள்ளுதலுக்கான சந்தைப் பெறுமதி மற்றும் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகையின் மீது லார்கினால் செய்யப்பட்ட மதிப்பீட்டின் மூலம் பாதிக்கப்பட்ட ஒழுங்குவிதி 3 (1) இல் குறியீடுசெய்யப்பட்ட காணியொன்றின் சொந்தக்காரர் காணி கொள்ளுதல் மற்றும் மீள் குடியமர்த்தல் விசேட குழுவுக்கு (இதனகத்துப்பின்னர்) "சுப்பர் லார்க்" (Super LARC) எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

(2) சுப்பர் லார்க் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டம் எனும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதி;

(ஆ) காணி, காணி அபிவிருத்தி எனும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதி;

(இ நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதி;

(ஈ) பிரதான விலை மதிப்பீட்டாளர் அல்லது அவருடைய பிரதிநிதி;

(உ) நில அளவையாளர் நாயகம் அல்லது அவருடைய பிரதிநிதி;

(ஊ) இயைபான குறித்துரைக்கப்பட்டகருத்திட்டத்தின் தவிசாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதியொருவர்.

(3) சுப்பர் லார்க் இயைபான எல்லா விடயங்களையும் கவனமாகக் கருத்திற்கொண்டதன் பின்னர் -

(அ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் லார்க்கினால் செய்யப்பட்ட மதிப்பீட்டை உறுதிப்படுத்தலாம்; அல்லது

(ஆ) மதிப்பீட்டின் தொகையை உயர்த்துவதன் மூலம் அல்லது குறைப்பதன் மூலம் லார்க்கினால் செய்யப்பட்ட மதிப்பீட்டை மீளாய்வு செய்யலாம்.

அத்துடன் அத்தகைய முடிபை எழுத்தில் மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கலாம்.

6. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக இத்தால் வெளிப்படுத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டின் ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய 1596/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2008 ஆம் ஆண்டின் காணி கொள்ளுதல் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் கருத்திட்டங்களுக்காக ஏதேனும் காணியின் கொள்ளுதல் மூலம் விளைவிக்கப்பட்ட ஊறு பாதிப்புக்காக சந்தைப் பெறுமதியை அல்லது நட்டஈட்டைத் தீர்மானிப்பதற்கு ஏற்புடையதாதலாகாது என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

7. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக -

"சட்டம்" என்பது (460 அத்தியாயமான) காணி கொள்ளுதல் சட்டம் எனப் பொருள்படும்.

"காணி கொள்ளுதல் உத்தியோகத்தர்" என்பது சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது;

"அங்கவீனமுற்ற ஆட்கள்" என்பது 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"பாதிக்கப்பட்ட சூழ்நிலையொன்றிலுள்ள குடும்பங்கள்" என்பது பெண்கள் தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்கள், அங்கவீனமுற்ற ஆட்களுடைய குடும்பங்கள் மற்றும் அறுபது வயதுக்கு மேற்பட்ட ஆட்களையுடைய குடும்பங்கள் எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது காணி, காணி அபிவிருத்தி எனும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் எனப் பொருளாகும்;

"நெற்காணி" என்பது நெற்செய்கை பயிரிடப்பட்டுள்ள அல்லது நெற்பயிர்ச்செய்கைக்காகத் தயாரிக்கப்பட்ட காணிகள் அல்லது சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதிக்கு முன்னதான குறைந்தது 5 ஆண்டுகள் நெற்பயிர்ச்செய்கைக்காக ஈடுபடுத்தப்பட்ட காணிகள் எனப் பொருளாகும்;

"தேருநர் இடாப்பு" என்பது 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது;

"வீட்டு வாடகைச் சட்டம்" என்பது 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வீட்டு வாடகைச் சட்டம் எனப் பொருளாகும்;

"மீள்நிறுவல் செலவு" என்பது கொள்ளுகின்ற நேரத்தில் சொத்தொன்றை மாற்றீடு செய்வதில் உளதாயிருக்கின்ற செலவு என்பதுடன் நியாயமான சந்தைப் பெறுமதி, கொடுக்கல் வாங்கல் செலவுகள், சேர் வட்டி, இடைநிலை மற்றும் மீள்நிறுவல் செலவுகள் மற்றும் வேறு ஏதேனும் ஏற்புடையதான கொடுப்பனவுகள் ஏதேனுமிருப்பின் அவற்றை உள்ளடக்குகின்றது. ஆனால், சொத்துகள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமானத் தேய்வு கணக்கில் எடுக்கப்படுதல் ஆகாது. செயல்திறனுடைய சந்தை நிலைமைகள் இல்லாதவிடத்து, மீள்நிறுவல் செலவானது கட்டிடப்பொருட்கள் எல்லாவற்றையும் விநியோகிப்பதற்கான செலவு, நிர்மாணத்துக்கான வேலையாட் செலவு மற்றும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது மீள் நிறுவல் செலவுகள் என்பவற்றுக்கு சமனாகும்.

"நியதிச்சட்ட நட்டஈடு" என்பது சட்டத்தின் 45 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் தீர்மானிக்கப்பட்ட சந்தைப் பெறுமதி மற்றும் நட்டஈடு எனப் பொருளாகும்.

6-382

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.